புதிய அவையம்
(Peer -Reviewed Journal)
ISSN: 2456-821X
Vol. 08, Issue 01 - June 2024

# வட தமிழக வரலாற்றில் சோழனூர் பாறை ஓவியங்கள்

**முனைவர் ஆ.பிரபு**
உதவிப்பேராசிரியர்,
தமிழ்த்துறை,
தூய நெஞ்சக் கல்லூரி, திருப்பத்தூர்.

பழங்கால மக்கள் நாடோடிகளாக நிலையற்ற வாழ்வினை மேற்கொண்டிருந்தனர். தங்களது வாழ்வில் நிலைகொண்ட நிகழ்வுகளைப் பதிவு செய்ய வேண்டுமென்று எண்ணியதால் ஓவியங்களை வரைந்திருக்கலாம். அவர்களுக்கு வேட்டையாடுதலே முக்கியத் தொழில். எனவே பல்வேறு மிருகங்களைத் தாம் வேட்டையாடுவது போல ஓவியங்களை வரைந்தால், வேட்டையாடும் போது அதிக மிருகங்கள் கிடைக்கும் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும், விலங்குகளைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெறலாம் என்ற நம்பிக்கையின் அடிப்படையிலும் அவற்றை வரைந்திருக்கலாம்.பாறை ஓவியங்கள் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் மனித இனத்தின் வாழ்க்கைச் சூழலைச் சித்திரிப்பனவாக அமைகின்றன. அவர்களது எண்ணங்கள் நம்பிக்கைகள் முதலியவற்றைப் பிரதிபலிப்பனவாக அமைகின்றன. பாறை ஓவியங்கள் வெவ்வேறு விதமான வடிவங்களிலும், வண்ணங்களிலும் வரையப்பட்டுள்ளன. ஓவியங்களின் வடிவம் மற்றும் ஓவியங்களில் இடம்பெறுகின்ற உருவங்களை வைத்து அவற்றை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

**முதல் நிலை**

முதல் நிலை ஓவியங்கள் தொல்பழங்காலத்தைச் சேர்ந்த மிகத் தொன்மையான ஓவியங்களாகும். இவற்றில் விலங்கின வடிவங்கள் மிகுதியும் இடம் பெற்றிருக்கும். இத்தகைய ஓவியங்கள் தமிழகத்தில் குறைவே.

**இரண்டாம் நிலை**

இரண்டாம் நிலை ஓவியங்களில் மிகுதியாக வேட்டைக் காட்சிகளே இடம் பெறும். இந்தியப் பாறை ஓவியங்களில், காண்டா மிருகம், சிங்கம், புலி போன்ற விலங்கினங்கள் குறைந்த எண்ணிக்கையில் இருக்கும். மான், ஆடு, பன்றி, மாடு முதலிய வேட்டைக்குரிய விலங்குகள் அதிகமாக இடம் பெறும்.

**மூன்றாம் நிலை**

இவ்வகை ஓவியங்களில் மனித வடிவங்கள் அதிகமாக இடம் பெறும். போர்க் காட்சிகள் சிறப்பாக இடம் பெற்றிருக்கும். வேட்டைக் காட்சிகளாக இருப்பினும் மனித உருவிற்கு முக்கியத்துவம் அளிக்கப்பட்டிருக்கும். சடங்கு மற்றும் நடன நிகழ்ச்சிகள் இடம் பெற்றிருக்கும்.

**வண்ணங்கள்**

முதல் நிலை ஓவியங்களில் கோடுகளாலான அமைப்பு இன்றி அடர்த்தியான வண்ணப் பூச்சு அமைப்புக் காணப்படும். செந்நிறம் அதிக அளவில் பயன்படுத்தப் பட்டிருக்கும். இரண்டாம் நிலை ஓவியங்களில் செந்நிறம், வெள்ளை, கருப்பு ஆகிய நிறங்கள் இடம் பெறும்.

**காலத்தைக் கணித்தல்**

பாறை ஓவியங்களில் பயன்படுத்தப்பட்ட வண்ணக் கலவையினை இரசாயனச் சோதனை செய்து அவற்றின் காலத்தைக் கணிக்கலாம். மேலும் ஓவியங்களின் வரைவு முறையினை வைத்தும் அவற்றின் வடிவமைப்பைக் கொண்டும் காலம் கணிக்கப்படுகிறது. சான்றாக, வரலாற்றுக் காலத்திற்கு முற்பட்ட பாறை ஓவியங்கள் அடர்த்தியான வண்ணப் பூச்சு முறையில் வரையப்பட்டிருக்கும். இவைகளில் சிவப்பு நிறமோ அல்லது வெள்ளை நிறமோ அதிக அளவில் பயன்படுத்தப் பட்டிருக்கும். ஆனால் இரண்டு நிறங்கள் பயன்படுத்தப் பட்டிருக்க வாய்ப்பில்லை. அடர்த்தியான வண்ணப் பூச்சு முறையைத் தொடர்ந்து வரும் வளர்ச்சி நிலை கோட்டோவியம் எனப்படும் சுற்று வரை கோட்டு முறை ஆகும். இரு வண்ண ஓவியங்கள் எனப்படுபவை மேற்கண்டவற்றுள் பிந்தைய காலத்தைச் சேர்ந்த ஓவியங்களாகக் கருதப்படுகின்றன.

பொதுவாக உருவம், வண்ணம், ஆகியவற்றைக் கொண்டு ஓவியத்தின் காலம் கணிக்கப்படுகிறது. மேலும் அவ்வோவியம் கிடைத்த இடத்தினருகில் கிடைக்கும் தொல்லியல் சான்றுகளை வைத்தும் காலம் கணிக்கப்படுகிறது. தமிழகத்தில் இதுவரை கண்டறியப்பட்ட பாறை ஓவியங்களைப் பெருங்கற்காலத்தின் இறுதிக் காலத்தையும், வரலாற்றுக் காலத்தின் தொடக்கத்தினையும் சார்ந்தவையாகக் கொள்ளலாம். சுருங்கச் சொன்னால் சங்க காலத்தை ஒட்டியவை எனலாம்.

**ஓவியங்களின் வடிவ அமைப்பு:**

**பக்கவாட்டு முறை**

பக்கவாட்டு முறை என்பது ஓவியத்தில் முகம் மற்றும் உடல் ஆகியவற்றின் ஒரு பக்கம் தெரியும்படி வரைவதாகும். வரலாற்றுக் காலத்திற்கு முன்னர் வரையப்பட்ட பாறை ஓவியங்கள் பக்க வாட்டு முறையில் அடர்த்தியான வண்ணக் கலவையால் வரையப்பட்டிருக்கும்.

**நேர் வடிவ முறை**

நேர்வடிவ முறை என்பது ஓவியம் நம்மை நேராகப் பார்ப்பது போல அமைந்திருப்பதாகும். நேர் வடிவ முறை முக அமைப்பைச் சிறப்பாகக் காட்டும். உதாரணமாக மனித உருவங்களைக் கூறலாம்.

**திரும்பிக் காணும் முறை**

உடலைப் பக்கவாட்டு முறையில் அமைத்து முகத்தை மட்டும் திருப்பிக் கொண்டிருப்பது போல் அமைந்திருப்பதைத் திரும்பிக் காணும் முறை என்பர். மிகத் தொன்மையான ஓவியங்களில் பசு, மான் முதலியவை திரும்பிக் காணும் முறையில் வரையப்பட்டிருக்கும்.

**சோழனூர் பாறை ஓவியம்**

திருப்பத்தூர் மாவட்டம் சோழனூர் என்ற ஊரின் அருகே கல்யாண முருகன் கோயில் சுற்றுவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வில் கற்கால மக்கள் தீட்டிய அழகிய பாறை ஓவியங்கள் கண்டறியப்பட்டன. திருப்பத்தூரில் இருந்து 6 கி.மீ தொலைவில் உள்ள சோழனூர் என்ற இடத்திற்கும் ஏலகிரி மலைச்சரிவிற்கும் இடையில் ‘கல்யாண முருகன் கோவில்’ அமைந்துள்ளது. இக்கொயிலுக்குக் கிழக்குப் புறமாக உள்ள சிறிய குன்றின் பக்கவாட்டில் இப்பாறை ஓவியங்கள் உள்ளன. அக்குன்றானது சிறிய குகை போன்ற அமைப்பில் உள்ளது. இக்குன்றானது ஒழுங்கற்ற சொரசொரப்பான மேல்புறத்தைக் கொண்டிருப்பதால், அக்கால மக்கள் தீயினை மூட்டிப் பாறையின் மேல்புறத்தைப் பெயர்த்தெடுத்த பின், அங்கு சமப்பகுதியை உருவாக்கி மிக நேர்த்தியாக ஓவியங்களைத் தீட்டியுள்ளனர். 6 அடி அகலுமும் 12 அடி நீளமும் கொண்ட மையப்பகுதியில் ஓவியங்கள் பரவலாக வரையப்பட்டுள்ளன. அவற்றில் 13 மனித உருவங்கள் காணப்படுகின்றன. அனைவரது கைகளிலும் ஆயுதங்கள் காணப்படுகின்றன.



**விலங்குகளும் மனிதர்களும்**

இங்குள்ள ஓவியங்களில் 6 மனித உருவங்கள் ஒரு கையில் ஆயுதங்களோடு விலங்கின் மீது அமர்ந்த நிலையில் மறுகையில் விலங்கின் கழுத்துப் பகுதியை பற்றிய நிலையில் சண்டைக்குப் புறப்படுவது போல வரையப்பட்டுள்ளன. சில ஓவியங்கள்

*நீளமான் பெரிய ஆயுதத்தை கையில் ஏந்திய நிலையிலும், அமர்ந்துள்ள விலங்கின் உருவமும் பெரிய அளவில் காட்டப்பட்டுள்ளன.*

**படகு போன்ற உருவம்**

*இங்குள்ள ஓவியங்களில் ஒன்றில் மனித உருவம் ஒன்று கையில் ஆயுதங்களோடு ஒரு படகு போன்ற அமைப்பில் பயனிப்பது போல வரையப்பட்டுள்ளது. வளைந்த நிலையில் அடர்த்தியாக வரையப்படுள்ளது ஆய்வுக்குரியதாகும். இங்குள்ள ஓவியங்கள் விவரிக்கும் செய்தி, இனக்குழுக்களுக்குள் எழும் சண்டை நிகழ்வினை விவரிப்பதாகக் கொள்ளலாம். மேலும் பெரிய அளவிலான வேட்டை நிகழ்வினை அறிவிப்பதாகவும் கருத இடமுண்டு. அக்கால மக்களின் வாழ்வியலை வெளிக்காடும் ஒப்பற்ற சான்றாக இவை அமைந்துள்ளன. மேலும் இன்னும் பல ஓவியங்கள் சிதைந்த நிலையில் காணப்படுகின்றன. ஏறத்தாழ 3500 – 4000 ஆண்டுகள் பழமையானவை இந்த ஓவியங்களாகும்.*



*தொன்மையான ஓவியங்கள் உலகின் பல பகுதிகளில் இயற்கையாய் அமைந்துள்ள குகை மற்றும் பாறை ஒதுக்குகளில் கண்டறியப்பட்டுள்ளன. தமிழகத்தில் பாறை ஓவியங்கள் பெரும்பாலும் குறிஞ்சி மற்றும் முல்லை நிலப் பகுதிகளிலுள்ள மலைகளில் புதிய கற்காலம், பெருங்கற்கால ஓவியங்கள் காணக்கிடைகின்றன. பழங்காலத்தில் மக்கள் பெரும்பாலும் இயற்கையான குகைத் தளங்களில் வாழ்ந்தனர். எனவே தாங்கள் வாழ்ந்த குகைகளில் ஓவியங்களை வரைந்தனர். குகைகளுக்கு அருகே இருந்த பாறைகளிலும் ஓவியங்களை வரைந்துள்ளனர். அக்கால மக்கள் தங்களது அன்றாட வாழ்வின் நிகழ்வுகளைப் பதிவு செய்ய வேண்டுமென்று எண்ணியதால் ஓவியங்களை வரைந்திருக்கலாம் அல்லது ஒரு இனக்குழு மக்கள் மற்றவர்களுக்கு அறிவிக்கும் பொருட்டுத் தமது அன்றாட நிகழ்வுகளைப் பதிவு செய்திருக்கலாம். அக்கால*

மனிதர்களின் உள்ளத்தில் தோன்றும் அக உணர்வுகள், அவர்களது வாழ்வியல்அனுபங்களை வெளிப்படுத்தும் ஊடகமே இப்பாறை ஓவியங்களாகும்.

பெருங்கற்காலச் சின்னங்கள் மற்றும் பல பாறை ஓவியங்களில் உள்ள மனித உருவங்கள் பொதுவாக குச்சி வடிவில் காட்டப்பட்டுள்ளன. மனித உருவ வடிவங்களின் அடிப்படைக் கூறுகளை எளிமைப்படுத்தி கோட்டுருவமாக தேவைக்குத் தகுந்தாற் போல் மனித உருவங்கள் வரையப்பட்டு வந்துள்ளன. இக்குச்சி வடிவங்கள் கை, கால், உடல்களோடு வில், அம்பு, கேடயம் மற்றும் பிற ஆயுதங்களை தாங்கியிருப்பது போல அமைக்கப்பட்டுள்ளன.



தமிழகத்தின் வட பகுதிகளில் நிறைய பாறை ஓவியங்கள் கண்டறியப்பட்ட போதும், திருப்பத்தூர் மாவட்டத்தில் சந்திரபுரம், செல்லியம்மன் கொட்டாய் ஆகிய இரண்டு இடங்களில் மட்டுமே இதுவரை வெண்மை நிறப் பாறை ஓவியங்கள் கண்டறியப்பட்டுள்ளன. இப்பாறை ஓவியங்கள் திருப்பத்தூர் மாவட்ட வரலாற்றை அறிந்துகொள்ள உதவும் மிக முக்கியமான வரலாற்று ஆவணமாகும். இதனைப் பாதுகாப்பதும் பள்ளி, கல்லூரி மாணவர்களுக்கு அதனை அறியச் செய்வதும் நமது கடமையாகும். இந்நிலையில் சோழனூரில் கண்டறியப்பட்ட பாறை ஓவியம் உள்ள குகைகளில் நெருப்பு மூட்டி கறி உணவுகள் சமைப்பது, மது அருந்துவது உள்ளிட்ட செயல்களால் இங்குள்ள பாறை ஓவியங்கள் அழிவின் விளிம்பில் உள்ளன. ஆகவே மாவட்ட நிர்வாகமும் தொல்லியல் துறையும் விரைவில் இப்பாறை ஓவியங்களைப் பாதுகாத்திட வேண்டும்.

*பயன்பட்ட நூல்கள்:*


- *தமிழகப் பாறை ஓவியங்கள், முனைவர் இராசு பவுன் துரை.*
- *தமிழக பாறை ஓவியங்கள் காட்டும் சமுதாயமும் வழிபாடும், தி. சுப்ரமணியன்*
- *கள ஆய்வுக் களம் : சின்ன வெங்காயப்பள்ளி (சோழனூர்), திருப்பத்தூர்*